24 மார்ச் 2019

# Newtec

NEW WAY OF BEING CHURCH

தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

தி ரு மு ழு க் கு ப் பெ ற் று அ னு ப் ப ப டு த ல்

மாதாந்திர கருப்பொருள்:

**சிலுவையை சுமக்க எங்களுக்குப் பலம் தாரும்**

# திருமுழுக்குப் பெற்ற அனைவரும் மனம்வருந்த அழைக்கப்படுகிறோம்



கொரிந்தியருக்கு எழுதிய கடிதத்தில் புனித பவுல் இவ்வாறு கூறுகிறார் (1 கொரி:10: 1-6,10-12) தங்களுடைய மூதாதையர்கள் பாலைவனத்தில் அலைந்து திரிந்த சூழ்நிலையைக் குறிப்பிடுகிறார். சிலர் அழிவு விளைவிக்கும் தூதரால் அழிவுக்கு உள்ளானார்கள். இவை மற்றவர்களுக்கு எச்சரிக்கையாகவும், இறுதிக்காலத்தில் வாழும் நமக்கு அறிவுரையாகவும் எழுதப்பட்டுள்ளன. எனவே, தாம் நிலையாக நிற்பதாக நினைத்துக் கொண்டிருப்பவர் விழுந்துவிடாதபடி பார்த்துக் கொள்ளட்டும்".

தவக்காலத்தின் 3 ஆம் வாரத்தை தொடங்கும் நமக்கு இந்த வாசகம் மனம் திரும்புவதற்கு ஒரு அழைப்பாக கொடுக்கப்பட்டுள்ளது.

நம்முடைய பாவங்கள் கடவுளுடைய இரக்கம் என்ற மலைக்கு முன்னால் மணல் போன்றவை.

- புனித ஜோன் வியான்னி

திருப்பாடல் ஆசிரியர் தம்முடைய பாடலில் கூறுகிறார். (திருபாடல்:103) அவரை நாடி வருவோருக்கு, இறைவன் கனிவும் இரக்கமும் உள்ளவர். நம்முடைய குற்றங்களையெல்லாம் மன்னித்து நம் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார். சினம் கொள்ள தாமதிப்பவராக, அன்பு காட்டுவதில் வள்ளலாக இருக்கும் இறைவனிடம் உண்மையாக மனம் திரும்பி வருபவர், நிச்சயாமக ஆண்டவரின் நன்மைகளையும் இரக்கத்தையும் அனுபவிப்பார்.

எவ்வாறு நம்முடைய இல்லத்திற்கு திரும்பி வரும் வழியைக் கண்டுபிடிப்பது?

இன்றைய நற்செய்தியில் இயேசு அத்திமரத்தின் உவமையைக் கூறும்போது, சீலோவாம் கோபுரம் இடிந்துவிழுந்து 18 பேர் கொல்லப்பட்டதை நினைவூட்டுகிறார். இயேசுவின் செய்தி மிகத் தெளிவானது. நீங்கள் மனம் மாறாவிட்டால் இவ்வாறு அழிந்துபோவீர்கள்.(லூக்கா 13:6-9) மனமாற்றம் என்ற செய்தியில் திராட்சை தோட்ட தொழிலாளரின் மென்மையான மனதைக் காட்டுகிறார். அவர் மரத்திற்கு அக்கறைக் காட்டி, தண்ணீர் பாய்ச்சி, உரமிட்டு அது கனிகொடுக்கும் என்று முயற்சி செய்கிறார். தோட்டத் தொழிலாளர் தன்னுடைய உரிமையாளரிடம் காய்க்காத அத்திமரம் கனிகொடுக்க இன்னும் கொஞ்சகாலம் அவகாசம் கேட்கிறார். நம் ஒவ்வொருவரையும் பேணிக்காப்பதில் பொறுமையைக் காட்டுபவர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. நாம் வாழும் இந்தக் காலம் கடன்வாங்கி வாழும் காலம், ஒவ்வொரு நேரத்திற்கும் நாம் கணக்குக் கொடுக்க வேண்டும். இன்று நம் இதயத்தின் வாசலருகில் நின்று ஆண்டவர் பொறுமையொடு கதவைத் தட்டுகிறார். நாம் கடன் வாங்கிய நேரத்தை வீணாக்கக் கூடாது என்று அவர் விரும்புகிறார்.

ஒப்புரவு அருளடையாளம் பெற்றுக்கொள்ள ஒப்புரவு அறைகள் இந்தக் காலத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளன. நம்முடைய இல்லத்திற்கு திரும்புவோம். நம்முடைய வாழ்வை ஆண்டவரின் பாதையின் பக்கம் திருப்புவோம்.

ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ளபோதே அவரைத் தேடுங்கள்; அவர் அண்மையில் இருக்கும்போதே அவரை நோக்கி மன்றாடுங்கள். கொடியவர் தம் வழிமுறையையும், தீயவர் தம் எண்ணங்களையும் விட்டுவிடுவார்களாக; அவர்கள் ஆண்டவரிடம் திரும்பி வரட்டும்; அவர் அவர்களுக்கு இரக்கம் காட்டுவார்; அவர்கள் நம் கடவுளிடம் வரட்டும், ஏனெனில் மன்னிப்பதில் அவர் தாராள மனத்தினர் (எசாயா 55: 6-7) †

**இன்றைய விவிலிய குறிப்பு:**

விடு.ப:3:1-8.13-15;

திபா:103: 1-2, 3-4, 6-7.8-11

1 கொரி: 10:1-6, 10-12

லூக்கா: 13:1-9

**வாரம் ஒரு வசனம்**

**நம் ஒவ்வொருவரையும் பொறுமையைக் காட்டுபவர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 12/2019

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org



**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2019 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
# *திருமுழுக்கு அளித்து அனுப்புதல்*
*2019 மார்ச்சு (பங்குனி) மாதத்தின் கருப்பொருள்:*
# *சிலுவையைச் சுமக்க பலப்படுத்துகிறது*

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: தவக்காலம் 3ஆம் ஞயிறு (ஆண்டு 3)** சனி **23-03-2019 - ஞாயிறு 31-03-2019**
வி.ப : 3: 1-8, 13-15 தி.பா: 103 : 1-2, 3-4, 6-7, 8, 11 1 கொரி: 10: 1-6, 10-12 லூக்கா : 13: 1-9
**" ஆண்டவரே, என் ஒளி, அவரே என் மீட்பர் " - திபா 103**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 23 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித கிறிஸ்தோபர்) | **மாலை 7 மணிக்கு குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 24 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (அப்.பணிக்குழு தமிழ்)<br>திருப்பலி (ஆ) (புனித மரியாள்)<br>திருப்பலி (சீ)<br>மாலை 4.30 தித்தி (சீ.மொ)<br>திருப்பலி (தே.மொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| **தவக்கால தியானம் : காலை 10 – 4 மணிவரை (தமிழ்)** | | | | **காலை 9 – 1 மணிவரை, மதியம் 2.30 – 5 மணிவரை (தே.மொ)** |
| திங்கள் | 25 | ***ஆண்டவரின் பிறப்பின் அறிவிப்பு பெருவிழா : மாலை 6 மணிக்கு செபமாலை / ஆன்மீக உரை / திருப்பலி / குணமாக்கல் வழிபாடு*** | | |
| செவ் | 26 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 27 | 6.45 கா | திருப்பலி | ***இரவு 8 மணிக்கு அ.தி.ச ஒன்றுகூடல் (BECCOT)*** |
| வியா | 28 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 29 | காலை திருப்பலி நடைபெறாது | | ***மாலை 7.00 மணி திருச்சிலுவைப் பாதையும் தொடர்ந்து திருப்பலியும் (அனைத்து மொழிகள்)*** |

**தவக்காலம் 4ஆம் ஞாயிறு (ஆண்டு 3)**
யோசுவா : 5: 9, 10-12 தி.பா: 34 : 1-2, 3-4, 5-6 1 கொரி: 10: 1-6, 10-12 லூக்கா : 15: 1-3, 11-32
**" ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள் " - திபா 34**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 30 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித கிறிஸ்தோபர்) | |
| ஞாயிறு | 31 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (அப்.பணிக்குழு தமிழ்)<br>திருப்பலி (ஆ) (புனித மரியாள்)<br>திருப்பலி (சீ)<br>திருப்பலி (தே.மொழி)<br>மாலை | **மறைக்கல்வ (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

## 2019 *மார்ச் (பங்குனி) மாத செய்திகள் / நிகழ்வுகள்*

1) பங்கு காணிக்கை:
16/17 மார்ச் 2019 ரிம: 9,910.00

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

1) **அருட்திரு கிறிஸ்டோபர் லோ - கார்மேல் சபை** குருவானவரை வரவேற்போம். இவர் நெகிரி மாநில சீனமொழி பேசும் மக்களுக்கு பேய்ப்புபணி ஆற்றுவதில் உதவி செய்வார்.
2) **நம்முடைய உணவு விடுதியில் தூய்மையைக் கடைப்பிடிப்போம்.** உணவு வாங்க வரும்போது, வரிசையில் வரவும். சாப்பிட்டவுடன், தட்டு, குவளைகள், கரண்டிகளை அதற்குரிய இடத்தில் வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3) **நெகிரி மாநில இளைஞர் பேரணி ( ஜூன் 28-30 - NUBE, போர்ட்டிக்சன்)** பதிவுகள் அனைத்து திருப்பலிகளுக்குப் பின்னும் நடைபெறும்.
தொடர்புக்கு: சப்ரீனா 013- 288 7624 - **இன்றே பதிந்து கொள்ளுங்கள்**

- **வாழ்த்தி வரவேற்போம்:** அருட்திரு போல் ரோபின்சன் (திரிகோனமலை மறைமாவட்டம், இலங்கை) மற்றும் அருட்திரு கிளேரன்ஸ் (பிரான்சிஸ்கன் சபை) மலாக்கா, ஜோகூர் மறைமாவட்டம்) நம்முடைய மினவுதல் தேவாலயத்தில் தவக்கால தியானத்தையும், மற்ற வழிபாடுகளையும் நிறைவேற்ற வந்திருக்கும் இவர்களுக்கு நம்முடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்

- **2019 தவக்கால ஒப்புரவு அருளடையாளம்:**
26/3 (செவ்) மாலை 6.45: அந்தோனியார் ஆலயம், கே.எல்
மாலை 7.30 : புனித ஜோன் வியான்னி, தம்பின்
27/3 (புதன்) இரவு 8.00 : கிறிஸ்து அரசர், கெப்போங் ஜெயா
28/3 (வியா) இரவு 8.00 : புனித லூர்து அன்னை, கிள்ளான்
29/3 (வெள்) பகல் 12.30: யோவான் பேராலயம், கே.எல்
**01/04/2019 (திங்கள்)**
**மாலை 7.00 : மினவுதல் மாதா தேவாலயம், சிரம்பான்**

- **எஸ்.பி.எம். விவிலியப் பாடம்:**வகுப்புகள் 06-04-2019 (சனிக்கிழமை) தொடங்குகின்றது. (படிவம் 3 & 4 மாணவர் களும் இந்தப் பாடத்தை எஸ்.பி.எம். ஆண்டில் ஒரு பாடமாக எடுக்குமாறு ஊக்குவிக்கிறோம். தொடர்புக்கு: ஹெலன் போல்: 012- 616 2811 / பேட்ரிக் ராஜ் 016- 6614 073)

இன்று திருப்பலியை வழி நடத்திய தமிழ் அப்போஸ்தலர் பணிக்குழுவினருக்கு நமது நன்றிகள்

- **நம்முடைய பொது இல்லமான பூமிக்கு அக்கறைக் காட்டுவோம்** "கிறிஸ்துவை அறிந்து அவரின் பணியாளர்களாகப் பணி செய்வோம்"
    - அன்னை பூமிக்கு அக்கறைக் காட்டுவதைப் பற்றி பிறரிடம் பேசுங்கள் (குடும்பம்/அதிச/சமூகம்)
    - குப்பைகளை தரம் பிரித்து வீசுவதன் மூலம் சுத்தத்தைப் பேணுதல்
    - இயற்கையோடு ஒன்றித்திருக்க செபியுங்கள்.
    - பிளாஸ்டிக் பயன்படுத்துவதை தவிர்ப்போம்/எரிப்பதை தவிர்ப்போம்
    - கடற்கரையை சுத்தப்படுத்தும் திட்டம்
    - தண்ணீரை வீணாக்காமல் இருப்போம்
    - அதிக மரங்களை வளர்ப்போம்.

- **டோமினிக் வேந்தர்கோன்விருது 2019-** சிறந்த தேர்ச்சி பெற்ற மாணவர்களின் கவனத்திற்கு: படிவம் 3 / எஸ்.பி.எம். / பல்கலைக்கழக A பிரிவு/ O பிரிவு/ மற்றும் எஸ்.பி.எம் விவிலியப் பாடம்; படிவங்களைப் பூர்த்தி செய்து ஒப்படைக்கும் இறுதி நாள்: 14-04-2019 - படிவங்களை பங்கு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- **சமயங்களுக்கிடையிலான கோல்ஃப் போட்டி:** நாள்: 06-04-2019 இடம்: சிரம்பான் இண்டர் நேஷனல் கோல்ஃப் மையம் (SIGC) தொடர்புக்கு: கிறிஸ்டோபர் கே (019- 6216 194)

- **ஆலய சூப் கிச்சன் குழுவினர் ஏற்பாடு செய்யும் கேளிக்கை சந்தை :** நாள்: 23/24 & 30/31 மார்ச் 2019 இடம்: விசிடேஷன் பார்லர். நேரம்: சனிக்கிழமைகளில் மாலை 5.00 -8.00 வரை ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8.00 -3.00 வரை.

- **சிறப்புத் தூதுரைப் பணி ஆண்டின் 'டி' சட்டை விற்பனை:** முன் பதிவு செய்து கொள்ளுங்கள். விலை ரிம: 15.00 (ஒன்றின் விலை)
நிறங்கள்: மெரூன் மற்றும் வெள்ளை. அளவுகள்: XS/ S/ M/L/ XL/ 2XL/3XL.
தொடர்புக்கு: டோரீன் (017-332 6007)

- **பங்கு மனிதவள மேம்பாட்டுக்குழுவினர் ஏற்பாடு செய்யும் இரத்த தான முகாம்** (ஞாயிறு) 07-04-2019 காலை 8.00 - 3.00 வரை இடம்: மினவுதல் தேவாலய மண்டபம். - "உயிரைக் காப்போராய் இருங்கள்; வாழ்வின் கொடையைக் கொடுங்கள்" - இரத்த தானம் செய்யுங்கள்.

- **தொடக்க நூற்றாண்டில் இருந்து இன்று வரை உள்ள அன்னை மரியாளின் மீது உள்ள நம்பிக்கை மற்றும் பக்திமுயற்சிகள்:** விளக்க உரை வழங்குபவர்: டாக்டர் ஸ்டீவன்செல்வராஜு - இடம்: மினவுதல் தேவாலய மண்டபம்: நாள்:13-04-2019. நேரம் காலை 9.00 - மாலை 4.00 வரை. கட்டணம்: ரிம: 10/- ஞாயிறு திருப்பலிக்குப் பின் பதிவு நடைபெறும்.

- **உடல்நலக்குறைவு உள்ளோரைக் கவனித்துக்கொள்ளும் காப்பாளர்களுக்கான ஒரு கருத்தரங்கு:** நாள்:06-04-2019(சனி) நேரம் காலை 8.30 - இடம்: Life Journey Wellness Centre, Kajang ( மாமறை மாவட்ட மன நல பணிக்குழு ஏற்பாடு) தொடர்புக்கு: lifejourney@archkl.org or Tel : 03-82118214. நன்கொடை ரிம:30/ மற்றும் அதற்கும் மேல்

- **சமயங்களின் இறையியல் - ஆன்மீக உரை: வழங்குபவர்:** அருட்திரு கிறிஸ்டோபர் சூசைபிள்ளை (வியாழன்) 04-04-2019 ; நேரம்: மாலை 7.00 - 10.00 வரை இடம்: API, K.L. நன்கொடையாக ரிம: 10/- தொடர்புக்கு: 03-2026 6466 / 03- 2022 0000

***30-03-2019 அன்று புத்தாண்டை கொண்டாடும்***
***'பஹாய்' சகோதர சகோதரிகளுக்கு நம்முடைய வாழ்த்துகள்***
***புத்தாண்டு நல் வாழ்த்துகள் !***